Registered as a NewsPaper in Ceylon ★ விலை: சதம் 15

தீபாவளிப் பண்டிகையைச் சிறப்புடன் கொண்டாடி மகிழ உங்கள் தரமான
ஜவுளித் தெரிவுகளுக்கு
இன்றே விஜயஞ்செய்யுங்கள்
ராஜ்கோபால்ஸ்
(பிரபல ஜவுளி மாளிகை)
36/1, பெரியகடை — யாழ்ப்பாணம்

# ஈழநாடு

EELA NADU
National Tamil Daily
தேசிய தினசரி
தபால் பெட்டி எண். 49 போன்: 389

விற்பனையாகிறது
தீபாவளி வாழ்த்து மடல்கள்
கண்ணைக் கவரும் வண்ணக் கலர்கள் ஏராளமான புதிய டிசைன்கள் குறைந்த விலையில் சிறந்த தயாரிப்பு சாம்பிள் செட்டுக்கு ரூபா 3 P.O அனுப்பவும், V. P. P. ஆடர்கள் கவனிக்கப்படும்.
தயாரிப்பு & விற்பனையாளர்:
தமிழ்ப்பண்ணை புத்தகநிலையம்
193, கே. கே. எஸ் வீதி,
19, பஸ்நிலையம்
யாழ்ப்பாணம்.

மலர் 13 புரட்டாதி 18 ஷஃபான் 13 (4—10—71) திங்கட்கிழமை இதழ் 235

# சீதனப்பேயை ஒழித்துக்கட்ட புதிய சட்டம் தயாராகும்

## சமூக சேவைகள் அமைச்சர் தீர்மானம்

கோட்டை, ஞாயிறு பெண்களைத் திருமணம் செய்துகொடுக்கும் போது சீதனம் கேட்பதையும் சீதனம் கொடுப்பதையும் தடை செய்வதற்கான புதிய சட்ட விதிகள் சிலவற்றை உருவாக்குவதற்கு சமூகசேவைகள் அமைச்சர் திரு. ரி. பி. தென்னக்கோன் முடிவுசெய்திருக்கிறார்.

இதுசம்பந்தமாக அமைச்சர் அவையின் அங்கீகாரத்தைச் சமூகசேவைகள் அமைச்சர் விரைவில் கோரவிருப்பதாகவும் அமைச்சரவையின் அனுமதி கிடைத்ததும் மக்கள் பிரதிநிதிகள் சபையில் மசோதா தாக்கல் செய்யப்படுமென்றும் தெரிகின்றது.

சீதனக் கொடுமையினால் விவாகம் நடைபெறாமல் துன்பமுறும் இளம் பெண்களுக்கும், அவர்களின் பெற்றோருக்கும் இந்தப் புதிய ஏற்பாட்டின் மூலம் நிவாரணம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

திருமணங்கள் சம்பந்தமாக இப்பொழுது நடைமுறையில் உள்ள சட்டத்தின் கீழ் சீதனம் கொடுக்கப்படுவதற்கோ கோரப்படுவதற்கோ தடை ஏதும் கிடையாது. இந்நிலைமையை மாற்றி சீதனக்கொடுமையை அறவே ஒழித்துவிடுவதுபற்றி அமைச்சர் முடிவுசெய்திருப்பதாகத் தெரிகின்றது.

## பிரி. விமானவிபத்தில் 63 பேர் பலி!

லண்டன், அக். 3 பிரிட்டிஷ் பிரயாணிகள் விமானமொன்று மேற்குப் பெல்ஜியத்தில் விழுந்து விபத்துக்குள்ளாகியது. விமானத்திலிருந்த 63 பேரும் கொலையுண்டதாக முதலில் வந்த செய்திகள் கூறின.

இப்பிரயாணிகளில் பெரும்பாலானோர் பிரிட்டிஷ் பிரஜைகள். விமானம் ஆகாயத்திலேயே வெடித்து விபத்துக்குள்ளானதாகக் கூறப்பட்டது. தரையிறங்கும் பொழுது விழுந்து நொறுங்கியதாக இன்னொரு செய்தி கூறியது. விபத்துக்கான காரணம் இன்னமும் தெரியவில்லை

## இளைஞர்கள் பிரச்னையை ஆராய கமிட்டி

கோட்டை, திங்கள் இந்நாட்டின் இளைஞர்கள் பிரச்னை பற்றி விசாரணை செய்ய அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் ஒரு கமிட்டியை நிறுவியுள்ளது.

இளைஞர்கள் பற்றி ஆராய இக்கமிட்டி பல கேள்விகளைக் கொண்ட பட்டியலைத் தயாரித்துள்ளது.

இக்கேள்விகளுக்கான பதில்களைக் கொண்ட பட்டியல்கள் கமிட்டியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு ஆராயப்படவிருக்கிறது

ஒவ்வொரு கேள்விகளுக்கும் பல பதில்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன, சரியான பதில்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு இளைஞர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

ஏப்ரல் 5-ந் திகதி நடந்த பயங்கர சம்பவங்கள் பற்றியும் கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன.

## ராணுவம் பராமரிக்கும்

கோட்டை, ஞாயிறு வித்தியோதய, வித்தியாலங்கார, வெலிக்கடை, நிரான் ஜெயில் ஆகியவற்றில் உள்ள புனர்வாழ்வு நிலையங்களில் உள்ள சுமார் 6000 பயங்கரவாதிகள்; இராணுவத்தினரின் நேரடி மேற்பார்வையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

இச்சிரமைப்பு நிலையங்களில் நடந்த சில சம்பவங்களைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பதுக்கல் கடிகாரங்கள் பிடிபட்டன

கோட்டை, ஞாயிறு பம்பலப்பிட்டியில் உள்ள ஒரு வீட்டில் கனிசப்பகுதியினர் நாட்டிற்கு கடத்தி வரப்பட்டதாக கருதப்படும் 100 கைக்கடிகாரங்களை கைப்பற்றினார்கள். இக்கைக்கடிகாரங்கள் வீட்டிலுள்ள கருச்சில் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாக சுங்கப்பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

திரு. எஸ். செல்வரத்தினம் தலைமையில் சென்ற சுங்க கோஷ்டியினர் இதனை கண்டுபிடித்தனர். இக்கோஷ்டியில் திரு. பிரசவ் பெர்ணாண்டோ, திரு. டபிள்யூ. பெரேரா ஆகியோரும் சென்றிருந்தனர்.

அந்த வீட்டுப் பிரதம குடியிருப்பாளருக்கு சுங்க ஆணையாளர் 3600 ரூபா அபராதம் விதித்தார்.

இப்பதுக்கல் வேட்டை நேற்று முன்தினம் நடைபெற்றது.

## இந்திரா கட்சியில் சம்பத்

சென்னை, அக். 3 ஸ்தாபனக் காங்கிரஸ் தமிழ்நாடு கமிட்டியின் முன்னாள் பொதுச்செயலாளர் திரு. ஈ.வி.கே. சம்பத் இந்திரா காங்கிரஸில் சேர முடிவுசெய்துள்ளார். அவருடன் அவரது ஆதரவாளர்களும் இந்திரா காங்கிரஸில் சேரவிருக்கிறார்கள்.

## பருத்தித்துறைக்கு வருவார்

பருத்தித்துறை, ஞாயிறு இலங்கைக் கூட்டுறவு மொத்த விற்பனை இலாகா தலைவர் திரு. ஆர். ஐ. ஒபயசேகரா இம்மாதம் 6ந் திகதி பருத்தித்துறைக்கு வரவிருக்கிறார்.

## இலங்கைக்கடலில் இரு மர்மக் கப்பல்கள்

கொழும்பு, ஞாயிறு ஹம்பாந்தோட்டை கடலில் இலங்கையின் அதிகாரத்துக்குட்பட்ட பகுதியில் இரண்டு இனம் தெரியாத கப்பல்கள் நங்கூரமிட்டிருப்பதை இலங்கை விமானப் படையினர் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த இரு கப்பல்களும் இப்பொழுது இலங்கைக் கடற்பிரதேசத்தைவிட்டு விலகிச்சென்றுவிட்டனவாம்.

இனந்தெரியாத கப்பலொன்று நங்கூரமிட்டிருப்பதை ஹம்பாந்தோட்டை ரோந்து பொலிசார் முதலில் கண்டு தலைமை நிலையத்திற்கு அறிவித்தனர். அதைத்தொடர்ந்து விமானப்படையைச் சேர்ந்த விமானங்கள் அப்பகுதியில் பறந்து உளவு பார்த்ததில் இன்னுமொரு கப்பலும் அப்பகுதியில் நங்கூரமிட்டிருப்பதைக் கண்டுபிடித்தனர். இந்த இருகப்பல்களிலும் அவை எந்தநாட்டைச் சேர்ந்தவை என்று அடையாளம் காணக்கூடிய அடையாளம் எதுவும் காணப்படவில்லையாம். பின்னர் இரு கப்பல்களும் இலங்கை கடற்பகுதியிலிருந்து வெளியேறிவிட்டன.

இலங்கைக் கடற்பிரதேசத்தில் கப்பல்கள் அன்னியநாட்டுக்கள் நங்கூரமிட்டிருப்பது பற்றி எச்சரிக்கையாய் இருக்கும்படி கரையோரப் பகுதிகளிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அரசாங்கம் அறிவித்திருக்கின்றது.

## ஜனவரி 8-ம் திகதி புதிய குடியரசு உதயமாகும்?

கோட்டை, ஞாயிறு அடுத்த ஆண்டு ஜனவரி 8ந் திகதி இலங்கை குடியரசாகப் பிரகடனப்படுத்தப்படலாமென்று இப்பொழுது கருதப்படுகின்றது.

ஜனவரி 8ந் திகதி காலஞ்சென்ற பிரதமமந்திரி திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் பிறந்த தினமாகும். இலங்கையைக் குடியரசாக்க வேண்டும் என்று கனவுகண்ட காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவின் பிறந்த தினத்தன்றே மக்கள் குடியரசைப் பிரகடனஞ்செய்வதும் மிக உசிதமாக இருக்கும் என்று அரசாங்கக் கட்சித் தலைவர்கள் கருதுவதாகத் தெரிகின்றது. இத்தினத்தை புதிய குடியரசுத் தினமாகக் கொண்டாடலாமென அரசாங்கத்துக்கு யோசனை கூறப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இது பற்றி இறுதி முடிவு எடுப்பதற்காகப் பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா விரைவில் அமைச்சர் அவையுடன் ஆலோசனை நடத்துவார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

நாடு குடியரசாகப் பிரகடனப்படுத்தப்படவிருக்கும் தினத்தன்று நாடு முழுவதும் களியாட்டங்களும், நடன நிகழ்ச்சிகளும் நடத்துவதற்கு இப்பொழுதே பல இடங்களிலும் ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

பல இடங்களில் நாட்டிய நாடகப்போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றனவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஒட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gearwheel cutting) என்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெஷின் கொம்பனி 95. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3625

RAJAH (Jaffna)
Daily 10-30, 4-45
7-00 & 9-45
Alan Ladd
in
SHANE
(for adults-color)

## விற்பனைக்கு

ராஜா படை மருந்து தேமல் கக்கல் பற்று, சகல விதமான அரித்து நீர் வடியும் சரும வியாதிகளுக்குச் சிறந்த பூச்சு மருந்து. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம், 160, செட்டியார் தெரு, கொழும்பு. 3624

பரந்தன் முல்லைத்தீவு றோட்டு, கண்டிக்குளம் சந்திக்குக் கிட்ட 10 ஏக்கர் நிலம் தென்னை, நெல்லு, உப உணவுப் பொருள் செய்யக்கூடிய நிலையில் இரத்துக்கோ அல்லது செய்கைக்கோ இருக்கிறது. நேரில் வரவும். ஆ. ஐயம்பிள்ளை நீலிப்பந்தனை, காரைநகர். 3329


## சதாத் மாஸ்கோ செல்வார்

கெய்ரோ, ஒக். 3

எகிப்திய அதிபர் அன்வர் சதாத் அக்டோபர் மாதம் 10-ம் திகதி வாக்கில் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்ய விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

......

## விபரம் கோரப்படுகிறது

அம்பன், ஞாயிறு

யாழ், மாவட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களதுசகலவிபரங்களையும் இம்மாதம் முடிவதற்குள் அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு நல்லநாதன் சகல உள்ளூராட்சிமன்றத் தலைவர்களையும் கேட்டுள்ளார்.

'நாஸ்திகம் பேசுவோர்

## வள்ளுவருக்கு விழா ஏன் எடுக்க வேண்டும்?"

உடுவில், ஞாயிறு

'நாஸ்திகம் பேசுபவர்கள் வள்ளுவருக்குவிழா எடுக்கிறார்கள். திருக்குறளில் சமய உண்மைகள் பரவிக்கிடக்கின்றன. அப்படியிருக்க அவர்கள் திருவள்ளுவருக்கு ஏன்விழா எடுக்க வேண்டும்?'

மானிப்பாய் மெமோரியல் மகாவித்தியாலய சைவ மாணவர் சங்கத்தினர் கொண்டாடிய சரஸ்வதி பூசைவிழாவில் கதாப்பிரசங்கம்செய்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததம்பிரான் சுவாமிகள் மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. கே. கயிலாயநாதர் தலைமையில் விழா நடைபெற்றது.

"ஆலயமென்பது கோவிலை மட்டும் குறிப்பதல்ல, உலகத்தில் மூன்று ஆலயங்கள் ஒன்று தேவாலயம், மற்றையது வித்தியாலயம் மூன்றாவது மடாலயம். இம்மூன்றிலும் நாம் கல்வி, செல்வம் வீரம் ஆகியவற்றைப் பெற முடியும். வித்தியாலயம் என்ற சொல்சில காலம் மறைவுற்று மீண்டும் இன்று மகாவித்தியாலயம் என்ற பெயரில் விளங்குகின்றது" என்று சுவாமிகள் கூறினார்.

## ரூபா 19,560 நன்கொடை

அம்பன், ஞாயிறு

குடத்தனைக் கிராமசபைக்கு இவ்வாண்டு நன்கொடையாக ரூபா 19560 ஒதுக்கப்பட்டுள்ளது. இவற்றில் அம்பன் முருகையன் கோயில் வீதிக்கு ரூபா 8000 நாகர்கோயில் கரையூர் ஆர்.சி சவேரியார்கோவில்வீதிக்குரூ 9000 ஆழிபுரம் நவீன சந்தைக்கு ரூபா 2560 வீதம் ஒதுக்கப்பட்டுள்ளன. இவ் வேலைகளுக்கான கேள்விகள் விரைவில குடத்தனைக்கிராம சபை முதல்வரால் கோரப்படவிருக்கின்றன.

......

## நாகர்கோயில் கப்பற்திருவிழா

அம்பன், ஞாயிறு

வட பகுதியில் பிரசித்தி பெற்ற ஸ்தலங்களுள் ஒன்றான நாகர்கோயில் நாகதம்பிரான் கோயில் கப்பற்திருவிழா இம்மாதம் 5-ம் திகதி நடைபெறும். 6-ம் திகதி சப்பரமும் 7-ம் திகதி வேட்டைத்திருவிழாவும் 9-ம் திகதி சமுத்திர தீர்த்தமும் நடைபெறும். இவ்வுற்சவத்தையொட்டி திராவிக பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. கப்பற்திருவிழாவன்று பருத்தித்துறை இ.போ.ச டிப்போவினால் விசேஷ பஸ் சேவை இரவு 11 மணி வரையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

## நன்கொடை

அம்பன், ஞாயிறு

குடத்தனை கிராமசபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 6 சனசமூகநிலையங்களுக்கு விரைவில் நன்கொடைப்பணம் குடத்தனைக் கிராமசபையினால் வழங்கப்படவிருக்கின்றது. இவற்றில் முதலாவது பிரிவைச் சேர்ந்த அம்பன் நாகர்கோயில் சனசமூகநிலையங்களுக்குப் பொதுவில் 50 ரூபா வீதமும் 2 வது பிரிவைச்சேர்ந்த நாகர்கோயில், கரையூர், குடத்தனை, குடாரப்பு, குடத்தனை கரையூர் ஆகிய இடங்களிலுள்ள சனசமூக நிலையங்களுக்கு 40 ரூபா வீதம் வழங்கப்பட இருப்பதாகவும் இவ்வாறு வழங்கப்படும். நன்கொடைகள் சனசமூக நிலையங்களின் சோதனைக்குழுவின் பொறிசின் பேரிலேயே வழங்கப்படுமென்றும் சரியான நிர்வாகத்துடன் இயங்காத சனசமூக நிலையங்களின் நன்கொடை நிறுத்திவைக்கப்படுமெனவும் குடத்தனை கிராமசபை முதல்வர் திரு வ. துரையப்பா தெரிவித்தார்.

......


## வேலையற்றோர் விபரம்

அம்பன் ஞாயிறு

குடத்தனைக் கிராமசபையிலுள்ள 11 வட்டாரங்களிலும் வேலையற்றிருப்போரது விபரமடங்கிய பட்டியலைத் தயாரித்தனுப்புமாறு வடமராட்சி வடக்குக் கிழக்கு காரியாதிகாரி குடத்தனைக் கிராமசபை முதல்வரைக் கேட்டுள்ளார்.


ராணி ஜெய்சங்கர் — விஜயலலிதா
(யாழ்ப்பாணம்) நடித்த
தினசரி 4 காட்சிகள்,
நூற்றுக்கு நூறு

மகத்தான 3வது வாரம்
லிடோ [யாழ்நகர்]
(காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30)
ரீகல் (கொழும்பு) திரைகளில்
தபால்காரன் தங்கை



ஜெமினி—வாணிஸ்ரீ— முத்துராமன்
மற்றும் பலர் நடித்தது

வெற்றிகரமான 7வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00
தெய்வ மகன்



சிவாஜி
[3 மாறுபட்ட வேடங்களில்]
ஜெயலலிதா
நம்பியார் — நாகேஷ்
சுந்தரராஜன்
நடித்தது.

நாகேஸ்வரி சினிமா
கன்னாகம்
தினசரி: 4-30 மட்டும்
சனி, ஞாயிறு 10-30
WOMAN OF STRAW


தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
N.S. கிருஷ்ணன்-மதுரம்
நடித்த
சிந்தாமணி

வெல்லிசினிமா
பி. ப 2-30, 6-30, 10-00
எம்.ஜி ஆர்-சரோஜாதேவி
எம் ஆர்ராதா-கண்ணாம்பா
நடித்த
நீதிக்குப்பின் பாசம்
(புதிய கொப்பி)

MANOHARA
Jaffna
Daily 4-45, 7&9-45 p.m.
Sat, Sundays 10-30
Robert Stack
Biddi Andersson
in
STORY OF A WOMAN
(adults only)

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p.m.
Sat. Sunday 10-30
Walt Disney's
KIDNAPPED

தினசரி 2-00, 10-00
எம்ஜிஆர்- சரோஜாதேவி
நாகேஷ்
நடித்த
ஆசைமுகம்



வின்ஸர்
யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினிகணேசன்
சௌகார்ஜானகி
(இரு வேடங்களில்)
ரவிச்சந்திரன்
எம். ஆர். ஆர். வாசு
வி. எஸ். ராகவன்
பேபி ராணி
நடித்த
காவியத் தலைவி
கதை-வசனம்-டைரக்ஷன்: கே. பாலசந்தர்

இலங்கை ஆயுள்வேத கூட்டுத்தாபனத் தயாரிப்புகள்
ஆசவங்கள் — அரிஷ்டங்கள்
லேகியங்கள்—சூரணங்கள்—மருந்துச்சரக்குகள்
மேற்படி கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட விலைப்பட்டியலின்படி கட்டுப்படுத்தப்பட்ட விலைக்கு பெற்றுக்கொள்ளலாம்.

ஜண்டு பாமஸி
[ZANDU PHARMACY - BOMBAY]
ஆசவங்கள் — அரிஷ்டங்கள்
லேகியங்கள் — சூரணங்கள் — பஸ்பங்கள்
மற்றும்
பிரபல ஆயுள்வேத வைத்தியர்கள், பார்மஸிகள் தயாரிக்கும்
மருந்துகள் — குளிகை வகைகள்
சூரணங்கள் — தைலங்கள்
மற்றும்
குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, தைலங்கள் எண்ணெய்வகைகள் மருந்துச்சரக்குகள்
எப்பொழுதும் மலிவாகக் கிடைக்கும்;

எஸ். சுப்பிரமணியம்
அன் கொம்பனி
(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த சில்லறை வியாபாரிகளும்)
53, கே. கே. எஸ். றோட், "பாலேந்திரா பில்டிங்"
பெரியகடை, 160, செட்டியார் தெரு,
யாழ்ப்பாணம். கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068 போன்: 35825


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்குப் பாகிஸ்தானில்

# ராணுவ அடக்குமுறைக்கு பிரி. தொழிற்கட்சி கண்டனம்

# இந்தியாவில் 90 லட்சம் கிழக்குவங்க அகதிகள்

லண்டன், ஒக். 3

கிழக்குப் பாகிஸ்தான் மக்கள்மீது ராணுவ பலத்தை பாகிஸ்தான் அரசு உபயோகித்து வருவதாக பிரிட்டிஷ் தொழிற்கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

பிரிட்டிஷ் ஆட்சிமன்றத்தில் பிரதான எதிர்க்கட்சியான தொழிற்கட்சியின் வருடாந்த மகாநாட்டில் சமர்ப்பிக்கப்படுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஓர் அறிக்கையில் இந்தக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்களால் தெரிவுசெய்யப்பட்டுள்ள தலைவர்கள் கொடுமைகளுக்குள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் அங்கு ராணுவ அடக்குமுறையை வைத்துக்கொண்டு அரசியல் தீர்வு காண முடியாதென்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வந்துள்ள அகதிகளின் தொகை இப்பொழுது 90 லட்சமாக உயர்ந்துள்ளது என்பதை உலக வங்கிக்குக் கிடைத்துள்ள தகவல்கள் ஊர்ஜிதப்படுத்துவதாக லண்டனிலிருந்து வெளிவரும் கார்டியன் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கின்றது.

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு அகதிகள் பெருவாரியாக வந்துள்ளதால் இந்தியாவுக்கே உலகவங்கி அதிக உதவிகளை வழங்க முடிவு செய்திருப்பதாகவும் அப்பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கின்றது.

### பௌத்த தலைவர் கொலை

பாகிஸ்தானிலிருந்த உலக பௌத்த சங்கத் தலைவர் ஒருவரை பாகிஸ்தான் ராணுவத்தினர் டாக்காவில் வைத்துக் கொலைசெய்து விட்டதாக புதுடில்லி வந்திருக்கும் வண. தர்மவீர என்ற பௌத்த பிக்கு அறிவித்திருக்கிறார். உலக பௌத்த சங்கத் தலைவரின் குடும்பத்தினரும் கொலை செய்யப்பட்டுள்ளதாக பிக்கு தர்மவீரா தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் பௌத்த சங்கத் தலைவரும் இரக்கமற்ற முறையில் கொலை செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆசிய நாடுகளுக்குச் சென்று பாகிஸ்தானுக்கு ஆதரவாக பிரசாரங்களில் ஈடுபட்ட பௌத்த சங்கத் தலைவர் மறுத்ததின் காரணமாகவே அவர்கள் கொடுமைகளுக்குள்ளாக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஏழு நாட்களில் கிழக்குப் பாகிஸ்தானில் விடுதலைப் படையினர் நடத்திய தாக்குதல்களில் சுமார் 200 பாகிஸ்தான் சிப்பாய்கள் கொல்லப்பட்டதாக புதுடில்லி செய்திகள் கூறுகின்றன. ஓர் இடத்தில் விடுதலைப் படையினர் ஆறு சிப்பாய்களைச் சிறைப் பிடித்ததுடன் ஏராளமான ஆயுதங்களையும் கைப்பற்றியிருக்கிறார்கள்.

## பாம்புப் பூங்கா

சென்னை, ஒக். 3

பாம்புகளை வளர்ப்பதற்கான பூங்காவொன்று சென்னையில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இந்தப் பூங்காவில் உலகின் பலபாகங்களிலுமிருந்து விதவிதமான பாம்புகளும் கொண்டுவரப்பட்டு வளர்க்கப்படும். இங்கு பாம்புகள் பற்றிய ஆராய்ச்சி மட்டுமன்றி பாம்புகளிலிருந்து நஞ்சை எடுத்து மருந்துகளுக்குப் பயன்படுத்துவது பற்றியும் ஆராயப்படுமாம்.

## வங்காள அமைதிக்கு மூன்று அம்சங்கள்!

நியூயார்க், ஒக். 3

வங்காளத்தில் அமைதி ஏற்படவேண்டுமானால் மூன்று அம்சங்களை யாஹ்யா ஆட்சியினர் முதலில் ஏற்றுக்கொள்ளவேண்டுமென ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை உறுப்பினர்களுக்குத் தங்கள் கருத்தை எடுத்துச் சொல்லச்சென்ற வங்காள தேச தூதுக்குழுவின் தலைவர் திரு. சௌத்திரி நியுயோர்க்கில் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

கிழக்கு வங்காளத்தைச் சுதந்திர நாடாக ஏற்றுக்கொள்ளவேண்டும். விசாரணை செய்யப்பட்டுவரும் அவாமிலீக் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்படவேண்டும், கிழக்கு வங்கத்திலுள்ள பாகிஸ்தான் இராணுவத்தினர் வெளியேறவேண்டும் என்ற மூன்று நிபந்தனைகளையுமே அவர் வலியுறுத்தினார்,

திரு. சௌத்திரி மேலும் தெரிவிக்கையில், கிழக்கு வங்காளத்தில் ஏற்பட்ட குழப்பத்திற்கு யாஹ்யா ஆட்சியினரே காரணம். அவர்கள்தான் கிழக்கு வங்கத்தை. தங்கள் குடியேற்ற நாடாக நினைத்து இனக்கொலை புரிந்துவருகிறார்கள் என்றார்,

### இடமாற்றம் பின்போடப்பட்டுள்ளது

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் பண்டிதர் வீ. வ. நல்லதம்பியின் இடமாற்றம் மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளது. இம் மாத முதல் இவர் சோப்பாய் நாவலர் பாடசாலைக்கு இடமாற்றப் படுவதாக முதலில் அறிவிக்கப்பட்டிருந்தது.

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலையில் கலைமகள் விழா நடைபெற்றது. இளைப்பாறிய தலைமையாசிரியர் திரு. சு. சண்முகரத்தினசர்மா உரையாற்றினார்.

# யு. எஸ். கடன்களை எகிப்து திருப்பிக்கொடுக்கும்

கெய்ரோ, ஒக். 3

அமெரிக்காவுக்கு எகிப்து திருப்பிச் செலுத்தவேண்டிய கடன்கள் சம்பந்தமாக இருநாடுகளுக்கு மிடையில் ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின்படி எகிப்து தனது கடன்களை அமெரிக்காவுக்குத் திருப்பிக் கொடுக்க ஆரம்பிக்கும். சுமார் 17 கோடி 50 லட்சம் டாலர் திருப்பிக் கொடுக்கப் படவேண்டியிருக்கின்றதாம்.

அரபு இஸ்ரேல் யுத்தம் ஆரம்பமானதை யடுத்து எகிப்து தான் வாங்கிய கடனைத் திருப்பிக்கொடுப்பதை நிறுத்தியிருந்தது. இப்பொழுது எகிப்து தனது கடனைத் திருப்பிக்கொடுக்கும் அதேசமயம் அமெரிக்காவும் பொருளாதார உதவிகளை வழங்கும் என்று தெரிகின்றது. சமீபத்தில் எகிப்துக்கு விஜயம் செய்த அமெரிக்க ராஜாங்க அமைச்சர் நடத்திய பேச்சுக்களின் பயனாக இந்த ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாம்.

## தெ. வியட்னாம் ஜனாதிபதி தேர்தல் ஆரம்பம்

# வியட்காங் ரொக்கட்டுகள் சைகோன் நகரைக்கலக்கின

சைகோன், ஒக். 3

**தென் வியட்னாமில் ஜனாதிபதி தேர்தல் இன்று ஆரம்பமாகியது. தேர்தல் ஆரம்பமாவதற்கு முன்னர் வியட்காங் கம்யூனிஸ்டுகள் செலுத்திய மூன்று ரொக்கட்டுகள் சைகோன் நகரைக் கலக்கின.**

பலத்த பந்தோபஸ்து ஏற்பாடுகளுடன் தேர்தல் ஆரம்பமாகியது. இத் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி வான் தியூ மாத்திரமே போட்டியிடுகின்றார். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவிருந்த வேறு இருவர் ஏற்கனவே போட்டியிலிருந்து விலகிக்கொண்டு விட்டனர். தேர்தலில் தாம் மாத்திரமே போட்டியிட்ட போதிலும் மக்கள் தமது தலைமையை விரும்பாவிட்டால் வாக்குச் சீட்டுக்கள் செல்லுபடியாகாமல் செய்வதின் மூலம் தமக்கு எதிராக வாக்களிக்கலாம் என்றும் பெரும்பான்மை வாக்காளர் தமது வாக்குச் சீட்டுக்களை செல்லுபடியாகாமல் செய்வார்களானால் பதவியிலிருந்து தாம் விலகிக்கொள்ள சித்தமாக இருப்பதாகவும் திரு. வான் தியு அறிவித்திருக்கிறார்.

இந்தத் தேர்தலில் சுமார் 70 லட்சம்பேர் வாக்களிக்க தகுதிபெற்றிருக்கிறார்கள். இந்தத் தேர்தலை எதிர்த்து கடந்தமாதங்களாக பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுவந்தன. இந்த ஆர்ப்பாட்டங்களின் காரணமாகவே நாடுமுழுவதும் பலத்த பந்தோபஸ்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. என்றாலும் கம்யூனிஸ்டுகள் தம் கைவரிசையைக் காட்டத் தவறவில்லை. கடந்த சில வாரங்களாகவே தென்வியட்நாம் [illegible] மீது அவர்கள் மோர்ட்டார் ஆயுதங்களாலும் ரொக்கட்டுகளாலும் தாக்கிவருகிறார்கள். இந்தத் தாக்குதல்களினால் இதுவரை 10 பேர் வரைக் கொல்லப்பட்டிருப்பதாகவும் சுமார் 30 பேர் காயமடைந்ததாகவும் சொல்லப்படுகிறது.

இன்று தேர்தல் ஆரம்பமாவதற்கு சுமார் மூன்று மணிநேரம் இருந்தபோது வியட்காங்கியரின் மூன்று ரொக்கட்டுகள் சைகோன் நகரில் விழுந்தன. ஒன்று பொதுச் சந்தை இருக்குமிடத்திலும் மற்றவை அமெரிக்க ராணுவ நிலையமொன்றின்மீதும் விழுந்தன. இதில் [illegible]

## அதிகாரிகள் வெளியேற்றம்

# பேச்சுக்களை பாதிக்காதாம்

லண்டன், ஒக். 3

பிரிட்டனிலிருந்து சோவியத் ராஜதந்திரிகளும் சிப்பந்திகளும் வெளியேற்றப்பட்டதின் காரணமாக ஐரோப்பிய பாதுகாப்புப் பற்றிய பேச்சுவார்த்தைகள் பாதிக்கப்படமாட்டாது என்று பிரிட்டிஷ் வெளிநாட்டு அமைச்சர் திரு. அலெக்டக்ளஸ் ஹியூம் நம்பிக்கை தெரிவித்துள்ளார். உளவு பார்த்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் பிரிட்டனிலிருந்து சுமார் நூற்றுக்குமேற்பட்ட சோவியத் பிரஜைகளை பிரிட்டிஷ் அரசாங்கம் சில தினங்களுக்கு முன்னாட்டை விட்டு வெளியேற்றியது. நாட்டின் பாதுகாப்பை உத்தேசித்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சேர் ஹியூம்

(4-ம் பக்கம் பார்க்க)

### டிட்டோ யு. எஸ். விஜயம்

பெல்கிரேட் ஒக். 3

யூகோஸ்லாவிய அதிபர் மார்ஷல் டிட்டோ இம்மாதம் இறுதிவாக்கில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவிருக்கிறார். அமெரிக்காவில் தமது விஜயம் முடிந்தபின்னர் கனடாவுக்கும் போவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தி ஜயந்தியன்று

# கிளிநொச்சி எம். பி. எடுத்த சபதம்

யாழ்ப்பாணம் திங்கள் காந்தி ஜயந்தி தினத்தை யொட்டி இனிமேல் வாழ்நாளில் என்றுமே சிகரட் புகைப்பதில்லை என உருத்திரபுரத்தில் நேற்று நடந்த சிறுவர் தின விழாவில் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி நூற்றுக்கணக்கானோர் முன்னிலையில் பகிரங்கமாக உறுதிமொழி எடுத்துக்கொண்டார். இவரைத் தொடர்ந்து அக்கூட்டத்திலிருந்த சுமார் 150 வாலிபர்களும் சிகரட் புகைப்பதில்லையென உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

102-வது காந்தி ஜெயந்தி சர்வதேச சிறுவர் தினவிழா உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் நேற்று திரு. இ. கந்தையா தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் உரையாற்றிய கிளிநொச்சி எம் பி திரு வி ஆனந்தசங்கரி பேசும்போது இக்கூட்ட அழைப்புக் கிடைத்தபோது இப்புனித தினத்தில் ஏதாவது ஒரு உறுதிப்பாடு எடுத்துக்கொள்ளத் தீர்மானித்ததாகவும் அதன்படி இனிமேல் சிகரட் புகைப்பதில்லை யென முடிவுசெய்ததாகவும் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து கூட்டத்தில் சிகரட் புகைத்துக்கொண்டிருந்த வாலிபர்களில் சிலர் சிகரட்டை வீசிவிட்டு தாங்களும் உறுதிபூணுவதாகத் தெரிவித்தனர். மேடையில் அமர்ந்திருந்த குமாரபுரம் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு இ க சுப்பிரமணியமும் இனிமேல் புகைப்பதில்லையெனத் தெரிவித்தார்

கிளிநொச்சி எம் பி திரு வி ஆனந்தசங்கரி மேலும் கூறியதாவது: தென்னிலங்கையில் வாழும் சிங்களமக்கள் காந்திய வழிப்படி பொருளாதாரத்தை விருத்தி செய்ய அங்குள்ள ஸ்தாபனங்களும் செல்வந்தர்களும் உதவியளித்து வருகின்றனர் அப்படியான ஸ்தாபனங்களுடன் நாமும் சேர்ந்து நாடுமுழுவதும் காந்திய தத்துவத்தை வளர்க்க ஏழைகளுக்கு வாழ்வளிக்க முன்வர வேண்டும்.

அரசியல்வாதிகள் தங்கள் வாழ்க்கையில் காந்தியத்தை பின்பற்றினால் அரசியல் தூய்மை பெறும். அவலம் அகலும். துன்பம் நீங்கும்.

இங்குள்ள நூற்றுக்கணக்கான சிறுவர்களை பார்க்கும் போது அவர்களின் எதிர்காலம் ஒளிமயமாகவேண்டும் என விரும்புகின்றேன். அதற்கான வழிவகைகள் என்ன? ஒவ்வொரு பெற்றோர்களும் இதைப்பற்றியே சிந்தனை செய்துகொண்டிருக்கிறார்கள். குழந்தைகளை நல்ல சூழ்நிலையில் ஒழுக்க சீலர்களாக இறந்த ... புகட்டிமுன்னுக்குக்கொண்டு வரவேண்டியது ஆசிரியர்களினதும் பெற்றோர்களினதும் கடமையாகும்.

கிளிநொச்சி காரியாதிகாரி திரு ஆ யோகநாதன் பேசும் போது காந்திநிலையத்தினர் ஆற்றிவரும் பணியைப் பாராட்டியதோடு இப்படியான பணிகளுக்கு தொடர்ந்து உதவிகிடைக்குமென்றும் தெரிவித்தார்.

திரு இ க சுப்பிரமணியம் திரு ஆர் வி ஜி டானியல் திரு கா செல்லையா, செல்வி பொ செல்வராணி ஆகியோரும் உரைநிகழ்த்தினர்: இறுதியில் கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

---

## காங்கேசன் துறை சுகாதார நிலையம்

மாவிட்டபுரம், ஞாயிறு "காங்கேசன்துறை சுகாதார நிலையம் அமைந்துள்ள இடம் விசாலமாக இருப்பதால் மேலும் இந்நிலையத்தை விரிவுபடுத்தி பல சுகாதார பிரிவுகளை" ஆரம்பிக்கலாம் என சுகாதார அமைச்சர் டபிள்யூ. பி. ஜி. ஆரியதாசா காங்கேசன் துறை சுகாதார நிலையத்தைப் பார்வையிட்டபின் தெரிவித்தார்.

காங்கேசன்துறை அரசினர் வைத்தியசாலை தெல்லிப்பளைக்கு மாற்றப்பட்டதையடுத்து தெல்லிப்பளையில் அமைந்திருந்த சுகாதார நிலையம் காங்கேசன் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் வைத்தியர்களின் விடுதிச்சாலையில் மேற்படி சுகாதார நிலையம் இன்று திறந்துவைக்கப்பட்டது. இவ்வைபவத்தில் மேற்படி நிலயத்தின் டாக்டர்களான எஸ். பாஸ்கரநாதன், வி. இராசரத்தினம். சுகாதாரப் போதனாசிரியர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள், தாதிகள் மற்றும் நிலைய ஊழியர்கள் கலந்துகொண்டனர். சுகாதார நிலையத்துடன் இங்கு தாதிகள் பயிற்சிப் பாடசாலையும் இயங்கவிருக்கிறது.

## நாவலர் முத்திரை

யாழ்ப்பாணம், செவ் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தபால்முத்திரை இம்மாதம் 29-ம் திகதி வெளியிடப்படவிருக்கிறது.

இம் முத்திரையுடன் அன்றையதினம், புனிதாச குமாரதுங்க. ஆனந்த ராஜ கருணு வண மகிந்ததேரோ கலாநிதி ஆனந்தகுமாரசாமி ஆகிய பெரியார்களின் நினைவாகவும் தபால் முத்திரைகள் வெளியிடப்படும்.

......

## வர்த்தக பாடப் போட்டிப் பரீட்சைகள்

### மன்றம் நடத்தும்

உடுவில், ஞாயிறு அகில இலங்கை வர்த்தகக் கலைமன்றத்தினர் இலங்கையில் உள்ள கல்லூரிகளில் வர்த்தகக்கல்வி பயிலும் மாணவர்களை மேற்படி கல்வியில் கூடிய கவனம் செலுத்துமுகமாக ஊக்குவிப்பதற்காக ஒரு கட்டுரைப்போட்டியை நடாத்தத் தீர்மானித்துள்ளனர். முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்குப் பரிசில்களும் பத்திரங்களும் வழங்குவதுடன் மற்றும் தரமான கட்டுரைகளுக்குப் பாராட்டுப் பத்திரங்களும் வழங்கப்படும். இதுசம்பந்தமான போட்டி நிபந்தனைகளும் விபரங்களும் ஒவ்வொரு பாடசாலை வர்த்தக ஆசிரியர்களுக்கும் மன்ற செயலாளர் திரு. மா. புவனேந்திரன் அனுப்பிவைத்துள்ளார்.

ஒன்பதாம் பத்தாம் வகுப்புகளில் கல்வி கற்கும் தமிழ்மொழி மாணவர்களுக்கு வர்த்தகம் கணக்கியல் ஆகிய இரண்டு பாடங்களிலும் ஆங்கில மொழி மாணவர்களுக்கு கணக்கியல் பாடத்திலும் போட்டிப் பரீட்சைகளை இவ்வருடம் கார்த்திகை மாதத்தில் நடாத்தி பரிசுகள் வழங்கவும் வர்த்தகக் கலை மன்றம் தீர்மானித்துள்ளது.

பயங்கரவாதிகளால்

## சேதமுற்றவீடுகளுக்கு நஷ்டஈடு கிடைக்கும்

கோட்டை. திங்கள் பயங்கரவாதிகளால் சேதப்படுத்தப்பட்ட வீடுகளுக்கு அரசாங்கத்தினால் நஷ்டஈடு வழங்கப்படவிருக்கிறது.

நஷ்டஈடு வழங்குவது பற்றிய விபரங்கள் கொண்ட சுற்றறிக்கை சகல அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் கே. பி. இரத்னாயக்கா தெரிவித்தார்.

தனிப்பட்ட நபர்களின் வீடுகளுக்கும், பயிர்களுக்கும் பயங்கரவாதிகளினால் ஏற்படுத்தப்பட்ட சேதங்கள் பற்றிய விபரங்களை தயாரிக்குமாறு அரசாங்க அதிபர்கள் இச்சுற்றறிக்கை மூலம்கேட்கப்பட்டுள்ளனர்.

வீடுகளுக்கும், பயிர்களுக்கும் பயங்கரவாதிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ள சேதங்கள் பற்றி ஆராய்ந்து நஷ்டஈடு வழங்க. ஒரு கமிட்டி நிறுவப்படவிருப்பதாகஎதிர் பார்க்கப்படுகிறது.

## "தாம்வாழ்ந்த காலத்தை ஆழ்ந்து புரிந்து கொண்டவர் பாரதி"

யாழ்ப்பாணம், திங்கள் "தாம் வாழ்ந்த காலச் சமுதாயத்தின் நடைமுறைகளை ஆழமாகப் புரிந்து கொண்டவர் பாரதி சமுதாயம் ஆட்சித்துறை, குடும்ப வாழ்க்கை என்பனவற்றுக்கு ஏற்ற நல்லகருத்துக்களைப் பாரதி தந்துவுள்ளார்" நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்றுவரும் பாரதிவிழா நேற்றைய நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்து உரையாற்றிய இளைப்பாறிய மலாயா கல்வி அதிகாரி எஸ். செல்லநாயகம் குறிப்பிட்டார்.

கருத்துக்களை நிறையக் கவித்திருப்பதே கவிதை. பாரதி கவிதைகள் படித்தோர் முதல் பாமரர்வரை இயைக் களிப்புறும் வகையில், ஓசையும் பொருளும் ஒன்றுபட்டுப் படிப்பவர் உள்ளத்தில் கருத்துப்புரட்சியை ஏற்படுத்தும் தன்மையானது.

அவர் ஓர் புரட்சிக்கவி என்பதில் சிறிதும் ஐயமில்லை"

இளைப்பாறிய யாழ். மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் பேசுகையில் சைவசமயம்வளர வேண்டும் என்றெல்லாம் மேடைகளிற் பேசுவதுடன் நில்லாது, எந்த மதத்தவர்களாயினும், எந்த இனத்தவராக இருந்தாலும் எம்மிடையே வேற்றுமை பாராட்டாது பாரதியார் காட்டிய வழியில் செல்ல வேண்டும். கடவுள் ஒருவர் தான். அவரை அடையபல வழிகளை நாம் கையாளுகிறோம்."

மதுரகான நாதஸ்வரமணி எஸ். எஸ். சிதம்பரநாதன் குழுவினரின் இன்னிசையுடன் ஆரம்பமான விழாவில் வித்துவான் சி. ஆறுமுகமும் உரையாற்றினர். மதுரகவி இ. நாகராஜன் தலைமையில் நடைபெற்ற வியரங்கில் கவிஞர்கள் வி. கந்தவனம், காரை சே. சுந்தரம்பிள்ளை வே ஐயாத்துரை. வே. குமாரசாமி, ஐை. அ. கயிலாசநாதன் ஆகியோர் பங்குபற்றினார்கள் திரு ஏ கே கருணாகரனின் சங்கீத இசையும் இடம் பெற்றது.

......

## "தமிழ் ஒலிக்க வேண்டும்"

சுழிபுரம், ஞாயிறு வருங்கால உலகத் தலைவர்களாகிய இன்றைய கல்லூரி மாணவர் நெஞ்சில் உரம் கொண்டு நேர்மைத் திறனுடன் பாரதியின் இலட்சியப் பாதையை நோக்கி வீறு நடை போடவேண்டும். நாம் பாரதியின் கனவை நிறைவேற்றல் வேண்டியதாகும்

இவ்வாறு மட்டக்களப்பு ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. செ இராசதுரை சுழிபுரம்விக்ரோறியாக் கல்லூரி மேல்வகுப்பு மாணவர் பேரவையால் கொண்டாடப்பட்ட பாரதிவிழாவின் போது பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் "எம் தமிழ் மொழி உலக மொழியாக ஒலிக்காதுவிட்டாலும் நம் நாட்டு மொழியாக வீட்டு மொழியாக, ஆட்சிமொழியாக ஆயினும் ஒலித்தல் வேண்டும்" என்றார் இதனையடுத்து திரு. அ அமிர்தலிங்கம் பேசுகையில். தமிழ் மக்கள் தங்கள் மொழி, தம் நாடு, தம் இனம் என்ற எண்ணத்தோடு உயர்வுக்காகப் பாடுபடல் வேண்டும். இவ் உணர்வு இன்றியமையாதது என்றும் குறிப்பிட்டார். திரு எஸ். கந்தசுவாமியும் சொற்பொழிவாற்றினார்.

......

## "சேவையின் இலக்கணம்"

சாவடி, ஞாயிறு "எத்திக்கிலாலும் எவ்வூரிலானாலும் சேவையையே தம் மூச்சாகக் கொண்டு கடமையைச் செய்தால் தான் அது நற்சேவையாக அமையும்" என யாழ்ப்பாணம் வடபெரும்பாகத் தபால் அத்தியட்சகர் அத்தோரில் பிரதமஎழுதுவினைஞராகக் கடமையாற்றிய திரு. ஏ சிவபுரத்தரசனும் எழுதுவினைஞராகக் கடமையாற்றிய திரு க. கிருஷ்ணலிங்கமும் கிளிநொச்சியில் இம்மாதம் 1-ம் திகதியிலிருந்து புதிதாக அமைக்கப்பட்டுள்ள அத்தியட்சகர் கந்தோருக்கு மாற்றலாகிச் சென்றதை முன்னிட்டு நடாத்தப்பட்ட பிரியாவிடை வைபவத்தில் பேசிய திரு. எஸ் எஸ். குலநாயகம் கூறினார்

வட பெரும்பாகத் தபால் அத்தியட்சகர் திரு. எம். நடராசாவின் தலைமையில் நடைபெற்ற இப் பிரியாவிடைவைபவத்தில் திரு. ஆர் சிறிநிவாசன், ஐ நடராசா உட்பட பலரும் உரையாற்றினர்

## மிஷன்கவுஸ் கொலைவழக்கு

கோட்டை, திங்கள் மிஷன்கவுஸ் இரட்டை கொலை வழக்கை கொழும்பு மாஜிஸ்திரேட் திரு ஏ எஸ். விஜயதுங்கா சுப்பிறீம் கோர்ட்டிற்கு பாரப்படுத்தினார்.

இவ் வழக்கில், சிரிலால் ஜெயசிங்க என்பவர் தெமட்டகொடவில் உள்ள மிஷன் கவுசைச் சேர்ந்த சேர்லி ஹெக்டர் பெரராவையும், அவரது மனைவியையும் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

......

பேச்சுக்களை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

சோவியத் ராஜதந்திரிகளும் சிப்பந்திகளும் பிரிட்டிஷ் அதிகாரிகளால் தாக்கப்பட்டனர் என்று சோவியத் ஏடான பிராவ்டா வெளியிட்ட செய்தியையும் பிரிட்டிஷ் அதிகாரிகள் மறுத்துள்ளன.


# தீபாவளி விசேட வெகுமதி இந்தியன் பருத்தி சேலைகள்

## அக்டோபர் 12-ந் திகதி நடைபெறும் 366-வது தேசிய லொத்தர் சீட்டிழுப்பில் ஆயிரம் தொடர்களுக்கு விசேட பரிசுகள்

பரிசுபெறும் டிக்கெட்டுகள் உட்பட, ரொக்கப்பரிசு பெறுவன உள்ளடங்கிய எல்லா ஆயிரம் டிக்கெட்டுகளுக்குரியவர்கள் தேசிய லொத்தர் சபைக்கு ரூபா 30/- செலுத்தி ஒரு இந்தியன் பருத்தி சேலையை பெற்றுக்கொள்ளலாம். இவ்விசேட பரிசுகள் 14-10-71 தொடக்கம் 30-10-71 வரை வேலை நேரங்களில் வழங்கப்படும். ஒருவர் ஒரு நேரத்தில் ஒரு டிக்கெட்டையே கையளிக்கமுடியும். கோரிக்கைகள் தேசிய லொத்தர் சபைக்கிளை அலுவலகங்களிலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

1-வது, 2-வது, 3-வது பரிசு பெறும் டிக்கெட்டுகளுக்கு தேசிய லொத்தர் சபைக்கு ரூபா 1000/- செலுத்தினால் ஒரு இந்தியன் கரை பட்டுச்சேலை வழங்கப்படும்.

கோரிக்கையின்போது பெற்ற விசேட பரிசில்களை அவை பெறுமிடத்தில் வைத்தே பரீட்சித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். ஏதாவது பழுது, சேதம், இருப்பின் அவற்றை உடனே திருப்பிக்கொடுத்துவிடவும். எடுத்துச்செல்லப்பட்ட பொருட்கள் பின்னர் எம்மால் திருப்பி எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. பெறுமிடத்திலிருந்து எடுத்துச்சென்ற பின் பொருட்களில் ஏதாவது பழுது அல்லது சேதம் இருப்பின் அவற்றிற்கு நாம் பொறுப்பாளிகளல்ல.

தேசிய லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செனட்சபை ஒழிப்பு மசோதா: கவர்னர் ஜெனரல் அங்கீகாரம்!

## சட்டப்படி இனி செயல்படாது

கோட்டை, சனி

**செனட்சபை ஒழிப்பு மசோதாவுக்கு கவர்னர் ஜெனரல் அங்கீகாரம் வழங்கியுள்ளார்.**

சட்டப்படி இனிமேல் செனட்சபை செயல்படமாட்டாது. கவர்னர்ஜெனரல் திரு. வில்லியம்கோபல்லாவ வின் அங்கீகாரத்தைப்பெற்றதைத் தொடர்ந்துசெனட் சபை ஒழிக்கப்பட்டுவிட்டது.

கண்டியில் கவர்னர் ஜெனரல் தங்கியிருந்ததால், சபாநாயகர் இந்த மசோதாவை அங்கீகாரம் பெறுவதற்காக அங்கு அவருக்கு அனுப்பி வைத்தார். இன்று கவர்னர் ஜெனரல் கொழும்பு வந்து சேர்ந்தார்.

1946-ம் ஆண்டு உருவான இலங்கை அரசியல் சாசனம் செனட் ஒழிப்பு மூலம் இப்போது திருத்தி அமைக்கப்படுகிறது.

## ''பாரதி ஊட்டிய உணர்ச்சி இலங்கையிலும் பரவவேண்டும்

அரியாலை, சனி

"பாரதி நாடு, மொழி, கலாச்சாரம் சம்பந்தமாகப் பாடியுள்ளார். இவை தமிழ் மக்களின் பண்பாடுகளை எடுத்துக்கூறுவதாக அமைந்துள்ளது. பாரதியின்பாடல்கள் இந்திய மக்களுக்கு மட்டுமல்ல இலங்கை மக்களாகிய நமக்கும் பயன்பெறக்கூடியதாக அமைந்துள்ளது. பாரதி ஊட்டிய உணர்ச்சி இலங்கைவாழ் மக்கள் மத்தியிலும் பரவவேண்டும்".

இவ்வாறு திரு. எம். ஸ்ரீகாந்தா நேற்று நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்ற பாரதிவிழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. வி. பொன்னம்பலம் பேசுகையில் நாட்டின்பொருளாதார சுதந்திரம் வேண்டும் என அன்றே தீர்க்கதரிசனமாகக் கூறினார் பாரதி. இந்தவகையிலேதான் ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் கண்டுள்ளன! புரட்சிக் கவிஞன் பாரதி இவைகளுக்கென்றே பாடல்களைப் பாடியுள்ளார் என்றார்.

பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி பேசுகையில், பாரதியின்பாடல்களை தெய்வீகம், தேசப்பற்று, மறுமலர்ச்சி என மூன்று வகைகளாக வகுக்கலாம்பாரதியின் 'அச்சமில்லை, அச்சமில்லை' என்ற பாடல் சுந்தரமூர்த்தி நாயனாரின் "நாமார்க்கும் குடியல்லோம்" என்ற பாடலின் கருத்தை ஒத்துள்ளது. நமது வாழ்க்கை அன்பின் அடிப்படையில்செல்லவேண்டும். அதைத்தான் பாரதி ஒவ்வொரு பாடலிலும் காட்டியுள்ளார் என்றார்.

## முற்போக்கு கொள்கைகளை செயல்படுத்த முன்வாருங்கள்

### திருமலையில் பதியுதீன் மஹ்மூத்

(திருமலை நிருபர் கி. நவரத்தினம்)

திருகோணமலை, சனி

அரசாங்கத்தின் தேசிய நலன் கருதும் முற்போக்கு கொள்கைகளைச் செயல்படுத்த முன்வருமாறு திருகோணமலையில் அழைப்பு விடுத்தார் கல்வி மந்திரி அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத்.

"இந்நாட்டில் வாழும் தமிழர் சிங்களவர் முஸ்லிம்கள் இன மத பாகுபாடில்லாது ஒன்றுபட்டு வாழவேண்டுமென்ற லட்சிய நோக்குக் கொண்டவர் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அதனால்தான் தமிழர்கள் ஆதரவின்றி ஆட்சி அமைக்கக் கூடிய அறுதிப் பெரும்பான்மை இருந்தும், தமிழரை நியமன எம். பி. யாக்கி, செனட்டராக்கி, அமைச்சர் பதவியையும் மனமுவந்து அளித்தார். நாடு சோஷலிசப் பாதையில் முன்னேறிச் செல்லவேண்டும். புதுயுகம் காண வேண்டும், நன்றாக வாழ்வோம், பெருமையோடு சாவோம்."

இவ்வாறு கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் இன்று திருகோணமலை நகரசபை அளித்த பிரமாண்டமான வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினார்

திருமலை முற்றவெளி மைதானத்தில், திருமலை நகரசபைத் தலைவர் டாக்டர் தம்பிஐயா தலைமையில் இவ்வரவேற்பு வைபவம் அளிக்கப்பட்டது.

திருமலையில் நடைபெறும் தமிழ்தின விழாவில் கலந்து கொள்வதற்காக திருமலைக்கு முதல் தடவையாக வந்த கல்வி மந்திரிக்கும், உதவி தவல் மந்திரி திரு. ஏ எல் ஏ மஜீத்துக்கும் இவ் வரவேற்பளிக்கப்பட்டது.

கல்வி மந்திரி அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"நகரசபை என்னைவரவேற்றிறதென்றால், முற்போக்கு கொள்கையுள்ள, சோஷலிசப் பாதையை நோக்கிச் செல்லும் உறுதியான எங்கள் அரசாங்கத்தை, மக்கள் அரசாங்கத்தைவரவேற்கிறது என்றுபொருள். தமிழ் முஸ்லிம் பெருமக்கள் ஒன்றிணைந்து அளிக்கும் இந்தவரவேற்பு என்னை மகிழ்ச்சியின் எல்லைக்கே கொண்டு செல்கிறது. கல்வித் துறையில் திருமலை பின்தங்கியுள்ளது என்பது எனக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஏற்றுக் கொள்கிறேன். ஏற்ற நடவடிக்கை எடுப்பேன் என்று உறுதி கூறுகிறேன். கல்வித் துறையில் பெரும் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன. இதன் பிறகு திருமலையின் கல்வி நிலைபற்றி கவலைப்படத்தேவையில்லை'' என்றார்.

உதவித் தவல்அமைச்சர் திரு ஏ எல் ஏ மஜீத் பேசுகையில், சிறுபான்மையினராகிய நாம்நமதுமொழியை பேணிப் பாதுகாக்கவேண்டும், மொழி வாழ்ந்தால் தான் நமது கலையும் கலாச்சாரமும் வாழும். அரசாங்கத்துடன் ஒத்துழைத்து மொழியையும் கலையையும் கலாச்சாரத்தையும் வளர்த்து, சோஷலிசப்பாதையில் முன்னேறிச் செல்வோம். அமைச்சர் என்ற முறையில் என்னை வரவேற்று உள்ளீர்கள் என்றால் எமது அரசை வரவேற்றிருக்கிறீர்கள், அரசின் சோஷலிசக் கொள்கைகளை வரவேற்றிருக்கிறீர்கள் என்று சொல்லாமல் புரிந்து கொள்ளலாம் என்றார்.

சிறைச்சாலைக்குள்

### உத்தரவின்றி எம். பி.க்கள் செல்லமுடியாது

கோட்டை, சனி

நாட்டிலுள்ள எந்தச் சிறைச்சாலைக்குள்ளும் ஆட்சி மன்ற அங்கத்தவர்கள் அரசாங்கத்தின் உத்தரவின்றி செல்ல முடியாது.

அவசரகால விதிகளின் கீழ் இத்தடை உத்தரவை நிதியமைச்சின் நிரந்தரச் செயலாளர் திரு. நிஹால் விக்ரமா விதித்துள்ளார்.

முன்னர் ஆட்சி மன்ற அங்கத்தவர் சகலருக்கும் சிறைச்சாலைக்குள் செல்ல எப்பொழுதும் அனுமதிவழங்கப்பெற்றிருந்தது. சமீபத்தில் சர்வதேச அம்னெஸ்டி ஸ்தாபனத்தைச் சேர்ந்த அலெபெரிபிரபுவுடன்ஹபரதுவ ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. பிரின்ஸ் குணசேகரா சிறைச்சாலையொன்றுக்குள் செல்ல முயற்சித்ததையடுத்தே மேற்படி தடையுத்தரவு எம். பி.க்களுக்குப் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பருத்தித்துறை

### உதைபந்தாட்ட முடிவுகள்

பருத்தித்துறை, ஞாயிறு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி முதல் பிரிவுக்கோஷ்டிக்கும் எதிரி பொமேஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் பொமேஸ் 6: 0 கோல்களால் வெற்றியீட்டியது. திரு. வி. செல்வராசா மத்தியஸ்தம் வகித்தார்.

ஹாட்லிக் கல்லூரி முதல் பிரிவுக்கும் வடமராட்சி விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடந்த போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா இரு கோல்கள் போட்டு வெற்றிதோல்வியின்றி ஆட்டத்தை முடித்துக்கொண்டன. திரு. எம். இராமகிருஷ்ணன் மத்தியஸ்தம் வகித்தார்.

வசாவிளான் மகாவித்தியாலய மூன்றும் பிரிவுக் கோஷ்டிக்கும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மூன்றும் பிரிவுக்கோஷ்டிக்குமிடையில் நடந்த மோதலில் வசாவிளான் 3: 1 கோல்களால் வெற்றியீட்டியது, மேற்படி கல்லூரிகளின் இரண்டாம் பிரிவுகள் மோதியபோது நெல்லியடி 2: 0 கோல்களால் வென்றது. இவற்றுக்கு முறையே திரு. டி. எம். மதியாபரணமும், திரு. ஜி. ஆர். இராசசிங்கமும் மத்தியஸ்தம் வகித்தனர்.

மென்பந்துப் போட்டிகளில்

## 'யங்லயன்ஸ்' கழகம் மீண்டும் சாம்பியன்

**ரஹ்மானே...**

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வரிசையில் தகமை பெறத்தக்க வாய்ப்பு அளிப்பதாக இருக்குமென்பதை சங்கம் வலியுறுத்துகின்றது.

இலங்கை நிருவாகசேவை நியமனங்களுக்கான போட்டித் தேர்வுக்குத் தோற்றுவதற்கு அஞ்சல் திணைக்களத்தின் ஊழியர் மாத்திரம் தடைசெய்யப்பட்டிருப்பதை மிகவும்பாரதூரமான செயல் எனச் சங்கம் கண்டிக்கிறது. எமது திணைக்களத்திலுள்ள ஊழியர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதியை காலந்தாழ்த்தாது நீக்கி, விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாட்டை உடனடியாக மீளப் பெறுமாறு சங்கம் அரசியலாளரை மீண்டும் கேட்டுக்கொள்கிறது.

ஞாயிறுவிடுமுறைத் திட்டத்தை அரசாங்கம் மீண்டும் கொண்டுவந்ததற்காக அரசாங்கத்தைப் பாராட்டுவதுடன் வாரம் ஐந்துநாள் வேலைத் திட்டத்தையும் அமுல் நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக எடுத்தல் வேண்டுமெனச் சங்கம் கேட்டுக் கொள்ளுகிறது.

திறைசேரிச் சுற்று நிருபம் இல 700மூலம் பழைய ஊழியர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும்சலுகைகளை வெறுமனதோ அல்லது பாதகமான திருத்தங்களை கொண்டுவருவதோ உண்மையில் பழைய ஊழியர்களை உதாசீனப்படுத்தி வேதனைப்படுத்தும் ஒரு செயலாக அமையும் என்பதை சங்கம் அரசாங்கத்திற்கு வலியுறுத்துவதோடு எக்காரணம் கொண்டும் இது விடயத்தில் எதுவித நடவடிக்கையும் எடுக்க வேண்டாமென வேண்டிக் கொள்ளுகிறது"

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மென்பந்துச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட 'ஆறு ஓவர்' மென்பந்துச் சுற்றுப்போட்டியிலும் இளஞ் சிங்க சனசமூகநிலையத்தினால் நடாத்தப்பட்ட மென்பந்துச் சுற்றுப் போட்டியிலும் யாழ்ப்பாணம் யங்லயன்ஸ் விளையாட்டுக்கழகம் மீண்டும் சாம்பியன் பட்டத்தைத் தட்டிக்கொண்டது

யங்லயன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் யாழ்ப்பாணம் கொன்வடிஞாயகார்ந்த விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற மென்பந்துச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் யங்லயன்ஸ் கழகம் இன்னிங்ஸால் வெற்றிபெற்றது.

இந்த இறுதியாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய யங்லயன்ஸ் கழகம் மொத்தம் 113 ஓட்டங்களைப் பெற்றது. இதில் வீரர் லூயிஸ் 41 ஓட்டங்களைப் பெற்றார்.

கொன்வடி கழகத்தின் முதல் இன்னிங்ஸில் மொத்தம் 29 ஓட்டங்களையும், 2வது இன்னிங்ஸில் மொத்தம் 21 ஓட்டங்களையும் பெற்றனர். யங்லயன்ஸ் கோஷ்டியின் பந்தெறி வீரர்களான இம்மனுவேல், குலநாதன், லூயிஸ் ஆகியோர் முறையே இரு இன்னிங்ஸிலும் 5, 4, 4 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இப்போட்டி யாழ்ப்பாண மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. ஜே. நி

### சிங்கப்பூர் பொலிஸ் அதிகாரி

கோட்டை, திங்கள்

இரத்தினக் கல் கரன்சி நோட்டுகள் மோசடிபற்றி நடைபெற்றுவரும் சி. ஐ. டி விசாரணைக்கு உதவியளிப்பதற்காக சிங்கப்பூரிலிருந்து உயர்தர பொலிஸ்அதிகாரி ஒருவர் இங்குவந்து சேர்ந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

தன்னை வெட்டும் கோடரியிடமும் மறைக்காது தன் நறுமணத்தைத் தரும் சந்தன மரத்தைப் போன்றவன் நேர்மையான மனிதன்.

—துளசிதாஸ்—

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

சாதாரண விரோதிகிருது வருஷம் புரட்டாதி மாதம் 18-ந் திகதி (4-10-71)

## ஒரு நல்ல சமிக்ஞை

செனட்சபை ஒழிப்பு மசோதாவுக்கு கவர்னர் ஜெனரலின் அங்கீகாரம் கிடைத்துவிட்டதால், இனி இலங்கை அரசியலில் ஜனப்பிரதிநிதிசபை மட்டுமே இருக்கும். இங்கு ஜனநாயகத்தை வெற்றிகரமாக நடத்தவும் நாட்டின் அமைதியையும் ஒற்றுமையையும் காக்கவும் வேண்டிய பொறுப்பு இந்த ஒரே சபையின் தலையில் சுமந்திருக்கிறது.

ஜனநாயகமென்பது என்ன? பெரும்பான்மையினரின் ஆட்சியா? அல்லது பொதுமக்களின் ஆட்சியா? பெரும்பான்மையினரின் ஆட்சி என்ற தவறான ஒரு கருத்து நிலவுவதால்தான் புதிதாகவிடுதலையடைந்த நாடுகள் பலவற்றில் அமைதியும் விரும்பத்தக்க ஒற்றுமையும் இல்லாதிருக்கின்றது. நம் இலங்கையிலும் கூட முக்கியமான சில விஷயங்கள் பெரும்பான்மையோர்களால்தான் தீர்மானிக்கப்படுகின்றன. எந்த விஷயமாகவும் கருத்துவேற்றுமைகள் ஏற்படுவது சகஜம். அப்படி ஏற்படும்போது இருசாரியும் தலைவர்களும் அமர்ந்து பரஸ்பரம்பேசி, விட்டுக்கொடுத்து சமரசமான முடிவு செய்வதென்ற கொள்கையைப் பின்பற்றினால், நம்நாட்டின் அமைதியும் தேசிய ஒற்றுமையும் பலப்பட்டு நாடு முன்னேறுமென்பதில் ஐயமில்லை.

இதுவரை எப்படியாயினும் இனி நாட்டின் தேசிய ஒற்றுமையைப் பலப்படுத்தவேண்டிய அவசியம் அதிகரித்துள்ளது. கட்சிவேற்றுமைகள் தேர்தல்காலத்தில் என்ன என்ன இருப்பினும், தேர்தலுக்குப் பின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிடையிலும் நல்லுறவும் ஒத்துழைப்பும் இருக்கவேண்டியது எவ்வளவு அவசியமென்பதை விளக்கத்தேவையில்லை. அதுவும் நாட்டில் நெருக்கடியும் ஆபத்தும் ஏற்பட்டிருக்கையில், ஜனநாயக சக்திகள் சேர்ந்து ஒத்துழைத்தால்தான், அராஜகம் தலைதூக்காமலும் பொதுமக்கள் நிம்மதியாக வாழவும் முடியுமாக இருக்கும்.

உணர்ச்சிவேகத்தில் அவசரப்பட்டு சட்டங்களை நிறைவேற்றுவது சாதுவாகவே, செனேட் என்ற இரண்டாவதுசபை அமைக்கப்பட்டது. அந்தப் பொறுப்பை அச்சபை நிறைவேற்றத் தவறிவிட்டதென்றாலும், இனி அந்தப் பாதுகாப்பும் இல்லை நிலையில், ஜனப்பிரதிநிதிசபை எனும் பார்லிமென்டின் பொறுப்பு திடீரென அதிகரித்துவிட்டது. இதை அரசாங்கமும் உணர்ந்துள்ளதற்கான சில நல்ல அறிகுறிகளைக் காண்கிறோம்.

தெல்லிப்பழை ஆஸ்பத்திரி திறப்புவிழாவில் அமைச்சர் ஆரியதாசா பேசுகையில், தாம் தமிழரின் நல்லெண்ணத்தைப் பெறவே இங்கு வந்ததாகத் தெரிவித்தார். பாராளுமன்ற விவகார அமைச்சரான திரு. கே. பி. ரத்நாயக்கா, "தினகரன்" பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் தமிழ்மக்களுக்கு முக்கியமானதோர் வேண்டுகோள்விடுத்துள்ளார். "இதுவரை நடைபெற்ற பழைய கதைகளையும் சம்பவங்களையும் மறந்துவிடுங்கள். நாம் அனைவரும் சகோதரர்கள் என்று மனம்விட்டுப் பழகுங்கள். எந்தக் குரோதமும் விரோதமுமின்றித் தமிழர்களுக்கு வேண்டிய தேவைகளைச்செய்ய மக்கள் அரசு காத்திருக்கிறது......" என்று அவர் கேட்டிருப்பதை வீண்போக முடியாது.

திருமலையில் நடந்த தமிழ்த்தின விழாவிலே உதவித் தபால் அமைச்சர் திரு. மஜீத் பேசுகையில், சிறுபான்மையினராகிய நாம் நமது மொழியைப் பேணிப் பாதுகாக்கவேண்டும். மொழி வாழ்ந்தால்தான் நமது கலையும் கலாசாரமும் வாழும்" என்று கூறியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. தமிழ்மக்களுக்குள்ள ஒரு முக்கிய குறை, தங்கள் மொழிக்கு ஏற்கனவே இருந்த அந்தஸ்து பாதிக்கப்பட்டதால் தாங்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக்கப்பட்டுவிட்டதென்பதுதான். அரசியல் நிர்ணயசபையை தமிழரசுக்கட்சிப் பிரதிநிதிகள் பகிஷ்கரித்துள்ளதன் காரணமும் இதுவே. தமிழரசுக்கட்சியினர் உள்ளிட்டு எல்லாக் கட்சித் தலைவர்களையும் பிரதமர் அழைத்து, மொழிப்பிரச்சினையைப் பற்றிப்பேசி, ஒரு சுமுகமான முடிவைச் செய்ய இது மிகநல்ல தருணம். இதுபற்றி ஒரு நல்ல சமிக்ஞையை அரசாங்கக்கட்சி காட்டுமாயின், தமிழரின் ஒத்துழைப்பு அரசாங்கத்துக்குக் கிடைப்பதுடன் தேசிய ஒற்றுமையும் பலப்பட்டு நாடு அமைதியாக முன்னேற முடியுமானதாகவுமிருக்கும்.

### "முன்னோர் தொண்டு"

தாவடி, ஞாயிறு

"வித்தையை வளர்க்க வித்தியாசாலைகளும் பக்தியை வளர்த்துப் பிறந்த பயனை அடையத் தேவாலயங்களும் உகந்தன என்று கருதிய தலைவர்களின் முன்னோர் வழிவந்த வித்தியாலயங்களையும் தேவாலயங்களையும் ஸ்தாபித்து கல்வியையும் பக்தியையும் வளர்த்தனர் நம் முன்னோர்கள்" என கொக்குவில் ஸ்ரீ தமிழ்க்கலவன் பாட சாலையில் கொண்டாடப்பட்ட ஸ்தாபகர் விழாவின்போது உரையாற்றிய தலைமையாசிரியர் திரு நடேசபிள்ளை கூறினார்.

## பனந்தொழில்: மூன்று ராஜ்யங்கள் உதவி

பனம்பொருள் ஆராய்ச்சி விஷயமாக முன்னாள் நீதி அரசரான திரு. சிவசுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் இந்தியா சென்றிருந்த கமிஷன்குழு, தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம் இம்மூன்று ராஜ்யங்களிலும் சுற்றுப்பிரயாணம் செய்து, பல பயனுள்ள விபரங்களைத் தெரிந்துவந்துள்ளது.

அக் குழுவின் காரியதரிசியாகச் சென்றவர் துரதிருஷ்டவசமாகத் திடீரென காலமானதால், அக்கமிஷனின் அறிக்கை தயாரிப்பதில் சற்றே தாமதமேற்பட்டுள்ளதாகவும், சீக்கிரத்தில் அறிக்கை வெளியாகுமென்றும் அறிகிறேன்.

மேற்குறித்த மூன்று ராஜ்யங்களுக்கும், இக்கமிஷன் காரியதரிசி தனித்தனியே எழுதிய கடிதங்களில் தாங்கள் அங்கு வருவதாகவும் தங்களுக்கு வேண்டிய உதவிகளை அளிக்கவேண்டுமென்றும் கேட்டிருந்தனராம். தமிழ்நாடு அரசிடமிருந்து உடனே பதில் கிடைத்துவிட்டது. அங்கு வருமாறும் வேண்டிய உதவியெல்லாம் அளிப்பதாகவும் அதில் தெரிவித்திருந்தனர்.

கேரள அரசாங்கம், டில்லியிலுள்ள மத்திய அரசாங்கத்துக்கு இதைப்பற்றி தெரிவித்துவிட்டு, அந்த சமயம் இக்கமிஷனுக்கும் வேண்டிய உதவி அளிப்பதாக எழுதியிருந்தது.

ஆனால் ஆந்திர அரசாங்கத்திடமிருந்து பதில் கிடைக்க அதிக தாமதமாயிற்றும். அவர்கள் புதுடில்லிக்கு இதைப்பற்றி எழுதி, அங்கிருந்து சம்மதம் கிடைத்தபின்பே, விசாரணைக்குழுவுக்குபதில் அளித்தனர்; அப்படியே நம் அறிக்கையிலுள்ள மூன்று ராஜ்யங்களும் நமக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய முன்வந்ததற்காக நன்றி தெரிவிக்கவேண்டும்.

பனந்தொழிலில் ஈடுபட்ட சில நிபுணர்களை இங்கு அனுப்பிவைக்கத் தமிழக அரசு சம்மதித்திருப்பதாகவும், உண்மையில் அவர்கள் வரக்கூடுமென்றும் அறிகிறேன். இங்கிருந்து சில மாணவர்களை அங்கு பயிற்சிபெற அனுப்புவதைவிட, அங்கிருந்து சில நிபுணர்கள் இங்கு வந்து, நம் வாலிபர்களுக்குப் பயிற்சி அளிப்பதே பலவிதத்திலும் நல்லதாகும். அந்த நிபுணர்கள் இங்கு வருவதால் இங்கு பனந்தொழில் விருத்தியடைந்து, நல்ல வருமானம் கிடைப்பதுடன் புதிதாக பல வாலிபர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைப்பதாகவுமிருக்கும்.

0 0 0

பனை விஷயமாக மட்டுமல்ல. வைராமிட்டையில் நூற்று கைத்தறியில் நெய்யும் கதர் துணியை இங்கு உற்பத்தி செய்வதற்கும் தமிழக அரசின் உதவியை இலங்கை நாடுவதாயின் இங்கு துணிப்பிரச்சினை மட்டுமன்றி வேலையில்லாப்பிரச்சினையும் ஓரளவு குறையும். மகாத்மா காந்தி கூறிய கதர் உற்பத்தியில், காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவும் ஈடுபட்டு, இலங்கையில் கதர் உற்பத்தி செய்து, சில காலத்துக்கு அவர் கதரே கட்டினார். இப்போது கதர் தொழிலை வளர்க்க இது நல்ல சமயம்.

கதர் காட்சியை இலங்கையில் நடத்தவும், இங்கு கதர் இயக்கத்தைப்பரப்பவும், இந்தியாவிலுள்ள சர்வோதய சங்கத்தார் தயாராக இருக்கின்றனராம். இலங்கை அரசு அனுமதித்தால், இலங்கையில் கொழும்பு, யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் இக்காட்சி நடத்தப்படலாமென்றும் தெரிகிறது. இந்தியாவின் உதவியையும், சிறப்பாகத் தமிழகத்தின் ஒத்தாசையையும் நாடுவதாயின், இலங்கையில் பல சிறு தொழில்களும் வளர வழிபிறக்கும்.

0 0 0

காரைநகருக்குச் செல்லுகையில் எதிரிலே பல மாடுகளும் கன்றுகளும் ஒன்றோடொன்று கயிற்றால் இறுகக் கட்டப்பட்டு எங்கோ சென்று கொண்டிருந்தன. விசாரித்ததில் அடிமாடுகளாக கசாப்புக்கடைகளுக்குச் செல்லுவதாக அறிந்ததும் மிக வேதனையாக இருந்தது. நமது கால்நடைகளை இப்படி இழப்பதாயின் இங்கு விவசாயத்துக்கும் பால் உணவுக்கும் எவ்வளவு நஷ்டம்!

இப்போது வெண்ணெயின் விலை மிக உயர்ந்துவிட்டது. நல்ல பால் கிடைப்பதில்லை. வெண்ணெய்க்கும் பால் உணவுகளுக்கும் வெளிநாடுகளையே எதிர்பார்த்து ஏங்குகிறோம். நமது செல்வம் வெளியேறுகிறது. நமது செலாவணியைப் பாதுகாக்கவேண்டுமென்று கூறும் அரசாங்கத்துக்கு, நமது கால்நடைகளைப் பாதுகாக்கவேண்டிய அவசியம் தெரியாதா?

இதுபற்றி அரசாங்கம் போதியகவனம் செலுத்தி, மக்கள், கறவை மாடுகளை வளர்ப்பதற்குக் கூடிய உதவிகள் செய்வது நல்லது. இன்றேல் நமது மதிப்பு மிக்க செல்வமான கால்நடைகளை இழந்து, பால் உணவுகளுக்கு அதிக சிரமப்படநேரிடும்.

பால் உற்பத்தியைப் பெருக்குவது, நகராட்சி மன்றங்களின் கடமை என்று மகாத்மா இங்கு வந்திருந்தபோது கூறினார். முன்காலத்தில் பல கோவில்களும் மடங்களும் மடங்களை வைத்து பால் உற்பத்தியைப்பெருக்கும், பசுக்களைப் பராமரித்து பால் உற்பத்தியைப்பெருக்குபவர்கள் நாட்டுக்கு மட்டுமன்றி தங்களுக்கும் உதவி செய்துகொண்டவர்களாவர்.

### ஐயசாளன் எழுதுவது

## இன்று நடைபெறும் அஞ்சல் எழுதுவினைஞர் சங்கக்கூட்டத்தில்

# ரஹ்மானைவிடுதலை செய்ய கோரும் தீர்மானம்

கோட்டை ஞாயிறு

கிழக்குப் பாகிஸ்தான் மக்களின் தனிப்பெரும் தலைவராகிய திரு ஷேக் முஜிபுர் ரஹ்மானை உடனடியாகஎவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யுமாறு பாகிஸ்தான் தலைவர் யாகியாகானை கோரும் தீர்மானம் நாளை நடைபெறும் அஞ்சல் எழுதுவினைஞர் சங்க கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

கொழும்பு இளம் கிறிஸ்தவ வாலிபர் கழகம் பிரதான மண்டபத்தில் நடைபெறவிருக்குக்கும் இக்கூட்டத்திற்கு நுழைவுச்சீட்டுடன் வரும் உறுப்பினர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

கிழக்குப் பாகிஸ்தானின் குடியியல் ஆட்சியை விரைவில் ஏற்படுத்தும்படியும் திரு சேக்முஜிபுர் ரஹ்மானை அநீதியான முறையில் கைது செய்து சிறையில் வைத்திருப்பதை கண்டித்தும் அத்தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்களும் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது: தமிழ்ப்பகுதிகளில் உள்ள தமிழ் அலுவலகங்களில் ...களது சகல அலுவல்களையும் தமிழ் மொழியிலேயே ஆற்றவேண்டுமென அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம் தமிழ் பேசும் மக்களை வினயமாக கேட்டுக்கொள்கிறது.

சைவசமயத்தினரான அரசாங்க ஊழியர்களுக்கு அவர் தம் சமயவழிபாட்டுக்கென வெள்ளிக்கிழமை தோறும் இரண்டு மணிநேர சிறப்பு விடுமுறையை கட்டாயமாக வழங்கும்படி இச்சங்கம் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறது.

சிங்களம் ஆங்கிலம் ஆகிய மொழிகள்மூலம் அரசாங்க சேவைக்குச் சேர்ந்த ஊழியர்கள் அம் மொழிகளில் கடமையாற்றும் வாய்ப்பையும் அதே மொழிகளில் தமது சேவை அலுவல்கள் சலுகைகள் ஆகியவைபற்றி அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளும் வசதியையும் பெற்றிருப்பது போல் தமிழ் மொழிமூலம் அரசாங்க சேவைக்குச் சேர்ந்த ஊழியர்களுக்கு அம்மொழியில் கடமையாற்றும் வாய்ப்பையும் அதே மொழியில் தமது சேவை அலுவல்கள் சலுகைகள் ஆகியனபற்றி அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ள அனுமதிக்கவேண்டும் எனவும் மனிதாபிமானத்திற்கு ... யற்கை நீதிக்கு முரணான வகையில் தமிழ்மொழிமூலம் அரசாங்கசேவைக்குச் சேர்ந்த ஊழியர்களை சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் சேவை செய்யும்படியோ அல்லது தேர்வு காணும்படியோ கேட்கக்கூடாதெனவும் சங்கம் அரசாங்கத்தை மீண்டும் கேட்டுக்கொள்கிறது.

ஆங்கில மூலமாக சேவைக்குச் சேர்ந்த சிங்கள ஊழியர்கள், தங்களது பதவி உயர்வுப் பரீட்சைகளுக்கு சிங்களத்தில் எழுத உரிமை வழங்கியதுபோல, ஆங்கில மூலமாகச் சேர்ந்த தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு தங்களது தாய் மொழியான தமிழ் மூலம் பதவி உயர்வுப் பரீட்சைகள் எழுத அனுமதிக்க வேண்டுமென இச்சங்கம் கேட்டுக் கொள்கிறது. இதனால் இவர்கள் இதர சக ஊழியர்களுடன்

(5-ம் பக்கம் பார்க்க)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலக்கம் 3 ஸ்ரான்லி வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 4ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org